
# செம்மணி



வெளிச்சம் வெளியீடு

# செம்மணி

கடத்திச் செல்லப்பட்டு
காணாமற் போனோராக்கப்பட்டு
வதையின்பின் புதைக்கப்பட்ட
எம் உறவுகளுக்கான கவிதைகள்

வெளிச்சம் வெளியீடு

செம்மணி
24 கவிஞரின் கவிதைகள்

'வெளிச்சம்' வெளியீடு - 03

முதற் பதிப்பு:
செப்ரெம்பர், 1998

ஓவியம்:
சச்சி

அட்டை அச்சு:
அந்திவானம் பதிப்பகம்

அச்சமைப்பு:
வவுனியா, வடக்கு ப. நோ. கூ. சங்கப்
பதிப்பகம், புதுக்குடியிருப்பு.

வெளியீடு:
வெளிச்சம்
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்

விலை:
ரூபா-50.00



# படையல

வதையுண்டு
சிதையுண்டு
செம்மணித்தரவைவெளியில்
புதையுண்டு போன
நம் உறவுகளுக்கு
இதுபடையல்.

# முன்னுரை

தமிழ் மக்கள்மீது சிங்களப் பேரினவாதம் நிகழ்த்தி வரும் அரசியல் வன்முறைகள் கடந்த ஐம்பது வருடங்களாகத் தொடர்வன. இந்த ஐம்பது வருடங்களிலும் தமிழர் வாழ்வு சந்தித்த இழப்புக்களும் துயரங்களும் ஏராளம். ஒடுக்குமுறையின் வளர்ச்சி பெற்ற இராணுவப் பயங்கரவாதம் கைதுசெய்தல், சித்திரவதை புரிதல், சுட்டுக் கொல்லுதல், சொந்த இடங்களைவிட்டு மக்களை விரட்டுதல் என்ற நீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமிழர்மீது உச்ச அழுத்தத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்த உச்ச நிலையின் ஒரு கூறுதான் தமிழ்மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுதலும்.

வெலிக்கடைச் சிறைச்சாலைப் படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை, பூவரசங்குளம் படுகொலை, குமுதினிப்படகுப் படுகொலை, வல்வைப் படுகொலை, குருநகர்ப் படுகொலை, இளாலிப் படுகொலைகள், நாகர்கோயில்படுகொலை, நவாலிப் படுகொலை என்று நீளும் இந்தப்படுகொலைப் பட்டியல் இன்று செம்மணிவரை வந்துள்ளது. வெவ்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்பட்ட இந்தப் படுகொலைகளில் தமிழ்க் குருதி ஆறாக ஓடியிருக்கிறது. அவலக் குரல்கள் காற்றில் பரவிக் கர்லத்திற் கலந்துள்ளன.

மக்கள் மீதான எந்தப்படுகொலையும் கொடூரமாகவே நிகழ்த்தப்படுகிறது. மிகக் கேவலமாகவே

அரங்கேறுகிறது. உக்கிரமானதாகவும் துயரம் தருவதாகவும் அநீதியின் அடிப்படையிலும் நிகழ்ந்து முடிகிறது. ஒடுக்குமுறையாளருக்கு படுகொலைகள் குறித்த எந்த முன்யோசனையும் இருப்பதில்லைப் போலும். கொலைவெறியும் பலிகொள்ளுதலும் பிரச்சினையின் நிரந்தரத் தீர்வுக்கு வழி தருமென்ற ஒரே மூடச்சிந்தனைதான் அவர்களுக்குண்டு.

சிங்களப் பேரினவாதத்தின் 'சமாதானம்' என்ற கருங்குரல் தீவிரமாக ஒலிக்கத்தொடங்கும் போதெல்லாம் தமிழ் நிலத்திலிருந்து சாம்பல் காற்றில் பறக்கிறது. தீச்சுவாலைகள் வானில் எழுகின்றன. புகையும் குருதியும் எங்கும் மணக்கிறது. மண்ணுக்கடியிலிருந்து எலும்புகள் முளைக்கின்றன.

இப்போது சிறிலங்கா தன்னுடைய சுதந்திரப்பொன் விழாவைக் கொண்டாடியதன் நினைவுச் சின்னமாக செம்மணிப் புதைகுழிகளை ஏற்படுத்தியுள்ளது.

முன்னர் நிகழ்ந்த படுகொலைகள் பற்றி, அவை எழுப்பிய உணர்வுகளை கோபத்துடனும், துயரத்துடனும் எதிர்ப்பு வலிமையுடனும் தமது படைப்புகளினூடே புலப்படுத்தியுள்ளனர் இந்த மண்ணின் படைப்பாளிகள். இந்த வகையில் 'செமமணிப் புதைகுழிகள்' ஏற்படுத்திய உணர்வுகளை இப்போதும் இங்கே கவிதைகளாக வெளிப்படுத்தியுள்ளனர் இந்தக் கவிஞர்கள்.

1995 ம் ஆண்டு 'ரிவிரச' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தைச் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த போது, அங்கிருந்து வெளியேறி, தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தஞ்சமடைந்த மக்களை மீண்டுமொரு இராணுவ நடவடிக்கை மூலம் சிறைப்படுத்திக் கொண்டு வெளியே தன்னை மீட்பராகக் காட்டி மீண்டும் சொந்த இடங்களுக்கு அது அழைத்துச் சென்றது. மக்களுக்கு தம்மை இரட்சகர்களாக உருமறைத்த சிங்கள இராணுவமும் அரசும் அவர்களை யாருங்காணாமற் பிடித்துச் சென்று, யாருமறியாமற் படுகொலை செய்து புதைத்த வஞ்சகச் செயலை அம்பலப் படுத்துகின்றன இந்தக் கவிதைகள்.



இவற்றில் படுகொலைக்கெதிரான கோபமும் கண்டனமும் கொப்பளிக்கின்றன. புதையுண்டு போன உறவுகளை இழந்த துயரம் பீறிடுகின்றது. வஞ்சகச் சூழ்ச்சியில் வெண்புறா விரித்த மாய வலையில் சிக்குண்டதற்கான அனுதாபம் எதிரொலிக்கிறது. 'உங்களின் அழிவுக்கெதிரான போராடும் வல்லமையை இப்படி இழந்து போனீரே' என்று புதையுண்டு போன உறவுகளை நோக்கிய விழித்தல் முன்னெழுகிறது. 'இன்னும் இந்தச் சூழ்ச்சி தொடர இடமளியாதீர்' என்ற முன்னெச்சரிக்கை எழுப்பப்படுகிறது.

மேலும், செம்மணிப் புதைகுழிகள் எங்கள் மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமே இந்தக் கவிதைகள். இவை உலகின் மனச்சாட்சியை உலுப்பும் குரல்கள். எங்கள் மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஒளிச்சுடர்கள். எதிரியினது சூழ்ச்சிகளின்மீது விழிப்புணர்வைத் தூண்டி, விடுதலை பெறுவதற்கான வெற்றிகளை ஈட்டித்தரும் வீரத்தை அருட்டும் உணர்வுப் பொறிகள்.

எமது இன்றைய நாட்கள் முன்னெப்போதையும் விட வலிமை கொண்டவனாக இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்டத்தினாலும், தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலினாலும் அரசியல் எழுச்சியும் போராட்ட முனைப்பும், போருணர்வும், வாழ்வுகுறித்த விரிந்த ஆழமான பார்வையும் விசாலித்துள்ளன. நெருக்கடிகளின் பல்வேறு அநுபவங்களும் எம்முள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பண்புகளைத் தம்முள் கொண்டனவாகவே இந்தக்கவிதைகள் அமைந்திருக்கின்றன.

இந்தத் தொகுப்பில் இன்னுமொரு அம்சமும் உண்டு. ஒரு பொருளை மையங்கொண்டு எழுதப்பட்ட பல கவிஞர்களின் கவிதைகள் இவை. இவ்வாறானதொரு கவிதைத்தொகுதி முன்னர், 'வானம் எம் வசம்' என்ற பெயரில் வெளியாகியிருக்கிறது. மக்களின்மீது குண்டுகளைப் பொழிந்து அனர்த்தம் விளைத்த படை விமானங்கள் எமது புலிவீரரால் சுட்டு வீழ்த்தப்பட்டபோது ஏற்பட்ட ஆனந்தக் களிப்பால் எழுந்த உணர்வுகளைத் தாங்கியவை அந்தக் கவிதைகள்.

'வானம் எம் வசம்' மகிழ்ச்சியின் ஆர்ப்பரிப்பு, வீரத்தின் அடையாளம், வெற்றியின் குறியீடு எனில்; செம்மணி சாவின் ஒலி; துயரத்தின் குரல்; கோபத்தின் முகம். தமிழில் இப்படி ஒரே பொருளில் பல கவிஞர்கள் எழுதிய கவிதைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பது இந்த இரண்டு தொகுதிகளிலும்தான். இது வரையில் சாத்தியமாகியிருக்கிறது என நினைக்கிறோம். அந்தளவுக்கு இந்தச் சம்பவங்கள் மக்களிடையேயும் படைப்பாளிகளிடையேயும் ஆழமான மன அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதே இதன் அர்த்தம்.

ஆனால், ஒரே பொருளில் எழுதப்படும் பல கவிதைகள், அது வெவ்வேறு கவிஞர்களால் எழுதப்பட்டிருந்தாலும்கூட வாசக அனுபவத்திலும் உணர்தலிலும் சலிப்பையும் தொய்வையும் ஏற்படுத்தா வண்ணம் வெற்றிகரமாக அமைய வேண்டிய சவால் இந்தத் தொகுதிக்குண்டு. இது கூட தமிழ்ப்படைப் புலகில் ஒரு வேறுபட்ட புதிய வளர்ச்சிநிலைதான்.

தமிழ்க் கவிதையின் புதிய பண்புகளில், ஈழத்துக் கவிதைகள் சாதித்துவரும் புதிய முயற்சிகள் பெரும்பாலும் போராட்டக் கவிதைகளினூடேதான் நிகழுகின்றது. எனவே, இது தமிழ்ப்படைப்புலகிலும் விடுதலைப் போராட்ட முன்னெடுப்பிலும் ஒரு முக்கிய பங்களிப்பாகவே அமைகிறது.

'வெளிச்சம்' சஞ்சிகையின் நூல் வெளியீட்டுத் தொடரில் இது மூன்றாவது நூல். இந்தத் தொகுதியில் பங்கேற்றுள்ள கவிஞர்களுக்கும் இதன் உருவாக்கத்தில் இணைந்து அட்டை ஓவியத்தை வரைந்துதந்த திரு. சச்சிதானந்த சிவம் (சச்சி) அவர்களுக்கும் அச்சமைப்பை மிக நேர்த்தியாக அழகுற அமைத்துத் தந்த புதுக்குடியிருப்பு, வவுனியா வடக்கு ப.நோ.கூ. சங்கப் பதிப்பகம் மற்றும், அட்டைப் பதிப்பைச் செய்து தந்த அந்திவானம் பதிப்பகத்துக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக இத்தொகுதியை வெளிக்கொணர உற்சாகமும், உறுதுணையுமாகி நின்ற அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், இந்தக்கவிதைகளை தங்கள் மனதில் கனலாக ஏற்றிகொள்ளும் மக்களுக்கும் வெளிச்சம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

△△



## அமைதி நகரின் மன்னம்பெரிகள்

அழகிய மன்னம்பெரி
அவள் ஒரு போராளி
அவளை அவர்கள் பிடித்தனர்.
ஒரு அழகியென்பதால்
அவளிடம் ரகசியங்கள் இருந்ததால்
அவளை அவர்கள் சிதைத்தனர்.
நிர்வாணமாக குறை யுயிராக
தெருவிலே விட்டுச்சென்றனர்.
அழகிய மன்னம்பெரி

ஆனால் அவளைப்போல
அவளது மரணம் அழகானதேயல்ல
அழகிய கிருஷாந்தி
இவளொரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள் பிடித்தனர்
கைதடி வெளியெல்லாம்
அவள் கதறிய குரல் அலைய
அவளை அவர்கள்
பலமுறை சிதைத்தனர்.
பிறகு
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்
அவளைத் தேடிச்சென்ற
தாயை தம்பியை அயலவரை
எல்லோரையுமே
கழுத்தை நெரித்து
செம்மணியில் புதைத்தனர்.
அழகிய ரஜினி
இவளும் ஒரு போராளியல்ல
ஆனாலும் அவளை அவர்கள் பிடித்தனர்
யாருமில்லாத வீடொன்றின்
சுவர்களில்
அவள் அழுதகுரல்
மோதி அழிய
அவளை அவர்கள் சிதைத்தனர்
பிறகு
கழுத்தை நெரித்து ஒரு
மலக்கிடங்கில் புதைத்தனர்
ரஜினி, கிருஷாந்தி
இருவரும்
அமைதி நகரின் மன்னம்பெரிகள்...
விதவை அரசி
சொன்ன
பொய்களின் பின்
சென்றார்கள்
தனியே சென்றார்கள்
வெண்தாமரைப் பொறிகளில் சிக்கினார்கள்



அமைதி நகரம்
அவர்களின்
அழகை இளமையைக் கேட்டது.
அதன் சாப இருளில்
பேய்கள்
பலம்மிகப் பெற்றெழுந்து
மன்னம்பெரிகளைத் தூக்கிச் செல்கின்றன
மன்னம்பெரிகளுக்கு ஆபத்து
தனியாகப் போகும்
எல்லா அழகிய பெண்களுக்கும்
ஆபத்து.

மன்னம்பெரிகளின் கதறல்
அமைதி நகரெலாம் நிறைகிறதே

கைதடிவெளியே
செம்மணிவெளியே ஐயோ!
அமைதி நகரமே
அமைதி நகரமே
அருவெருப்பானதொரு பொய்யே
உனக்கும் ஐயோ

இதோ
சமாதானம்
அதன் மரணநெடியுடன்
ஒரு மாய வலையென
எமது நகரங்களின் மீது
விழுகிறது

வருகிறார்
விதவை அரசி
வெற்றிக்கொடி

வெண் தாமரை
இரண்டிலும் குருதி வடிய
அதே
வசியச் சிரிப்பு
அதே
வெறித்த விழிகள்
அதே முறிந்த
வாக்குறுதிகள்.

வருகிறார் விதவை அரசி
கவனம்
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாச் சிறு
பெண்களும் கவனம்
மன்னம்பெரிகளின் ஆவி
விரைவில்
விதவை அரசிகளைத் துரத்தும்.
முன்பொரு விதவையின்
வெற்றிக்கொடி
அறுந்து
மண்ணில் வீழ்ந்ததுபோலே
மன்னம்பெரிகளின் ஆவி
எழும்.
அதுவரை
அமைதி நகரின் மக்களே
கவனம்
அழகிய எல்லாப் பெண்களும்
கவனம்.

யாகத்தில் நிராகரிக்கப்பட்ட
சதிதேவியின் கோபத்தோடு
புல்மூடிய
புதைகுழி நீத்து
எல்லா
மன்னம்பெரிகளும்
எழுக
அமைதி நகரம் அழைக்கிறது
அமைதி நகரம் அழைக்கிறது



அதன் வாசலிலே
கிருஷாந்தி
அமைதியுறா மனத்தினளாய்
அன்றொரு நாள்
ஊழிப்பெருநடனம் தோன்றக் காரணமாயிருந்த
சதிதேவியின் விழிகளைப் பெற்று
கைதடி
வெளியெலாமாகி
செம்மணி
வெளியெலாமாகி
வாசலிலே கிருஷாந்தி.

△

மன்னம்பெரி — ஒரு அழகுராணி. ஜே.வி.பி போராளி. 1971ஜே வி,பி கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டு கடுமையாக சிதைக்கப் பட்டு பின் சுட்டுகொல்லப்பட்டாள் அவள் சிதைத்துக் கொல்லப்பட்ட விதம் பின்னாளில் சிறிமாவோ ஆட்சிக்கெதிரான மேடைகளில் அதிகம் அதிகம் சொல்லப் பட்டது. மன்னம்பெரியின் ஆவி சிறிமாவோவை அவர் தோற்கும்வரை துரத்திச் சென்றது.

சதிதேவி — (தட்சாயினி) ஒரு புராணநாயகி. தட்சனின் மகள். தன் தந்தையை மீறி சிவபெருமானைத் திருமணம் செய்தாள். பிறகு தட்சன் யாகம் செய்த போது சிவனார் எச்சரித்ததையும் மீறி அங்கு சென்றார். அங்கே யாகசாலையில் தந்தை தட்சனால் அவமதிக்கப்பட்டார். அதனால் தற்கொலை செய்து கொண்டார். இறந்த தன் மனைவியின் உடலை ஏந்தியபடி கோபமடைந்த சிவனார் ஆடியதே ஊழிப் பெருநடனம் எனப்படுகிறது.

(யாழ்ப்பாணம் மாணவர் ஒன்றியம், 31.10 96ல்
வெளியிட்ட துண்டுப்பிரசுரக் கவிதை)

# கருவறையில் இருந்து புதைகுழிக்கு

புதுவை இரத்தினதுரை

கொள்ளி எடுத்து வைக்க
கொப்பன்ரை கையாலே
என்ரை ராசாவுக்கு ..
குடமுடைச்சுப் போடலையே.
அள்ளிப் பொடியெடுத்து
அப்பன்ரை கையாலே
என்ரை ராசாத்திக்கு ..
அந்திரட்டி செய்யலையே.

போக்கறுந்து போவாரே
புதைத்த இடத்தையாவது சொல்லுங்களேன்.
எம்முலையூறிய அமுதத்தால் பலமூறிய
எலும்புகளையாவது பார்த்தாற.
எந்த இடமெனக் காட்ட இயலுமெனச்
சொன்னானே ஒரு பாவி.
அவனையேனின்னும் அழைத்து வரவில்லை?
சுமந்த வயிறெரியும் நெருப்பவரைச்
சும்மா விடாது.
தொடர்ந்து விரட்டும்.
''அஞ்ஞாதவாசத்திருக்கும் தர்மம்''
நாளை ஊர்திரும்பி
குருசேத்திரத்தில் ''அதர்மத்தை'' சந்திக்கும்



அதுவரைக்கும்
ஒப்புக்கு ஊர்கூடி ஒப்பாரிவைத்து
நெஞ்சடிக்கும்.
பின் எல்லாம்மறந்து தேரிழுக்கப்போகும்.
பூக்கொண்டு வரும் புஷ்பகவிமானம்
எம்பிள்ளைகளின் புதைகுழிமேற் பறந்து
நல்லூரில் மலர்தூவி ஏகும்.
''வெள்ளுடுப்புக்காரர்'' விழாவெடுக்க
செம்மணியில் நினைவுக்கல் நட்டு
''வாக்குப்பொறுக்கிகளே'' திரைநீக்கமும் செய்வர்.
எமக்கே ''முதல்மரியாதை'' என அழைத்து
முன்வரிசையமர்த்தி முழங்குவர்.
கேட்கும் விதியென்றாகும்.
அதன் பிறகு?
வருவது இரண்டாவது மாரிகாலம்
ஊர்வெள்ளமோடி நிரம்பும் உப்புத்தரவை.
உன்ளே
பிள்ளைகளின் பொன்மேனியுக்கி எருவாக
வெளியே வெள்ளெருக்கும்; கள்ளியும் வேர்விடும்.
அப்போதும் கட்டளைக்குப் பணிந்து
சால்வையெடுத்துக் கக்கத்தில் வைத்தபடி
எட்டுமணிக்குள்ளே அடங்குமெம் அயல்.
விடிந்ததும்
காவலரணுக்கு ஒரு புன்னகையுதிர்த்துக்
கையசைத்துப் போவர் ''தமிழர்''.
பிள்ளைகளே!
காலாலுதைத்து நிலம்பிளந்து
புதைகுழியிருந்து வெளிவருக.
பொய்யமைதி குலைந்து போகச்
சாமப்பொழுதில் ஓலக்குரலெடுத்துப் பாடுக.
செம்மணிவீதியில்
உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கொன்றைப்
பிரகடனம் செய்க.
வருவோர் போவோர் எவரெனினும் வழிமறித்து
குருதிவழிய மூக்குடைத்துப் பொருதுக.
பேயடிப்பதாய் ஊர்பேசிப் பதறட்டும்.
இது பேசாதிருக்கும் ஊருக்குப்
பொருத்தமான தண்டனை.

## சந்ததி அளி(ழி)க்கும் தந்திரம்

ச. வே. பஞ்சாட்சரம்

குடிகள் துணையாய்க் குடிபேண் அரசீ!
முப்பதினாயிரம் அப்பாவி கொன்றேனும்
யாழ்குடா தன்னை அடித்துப் பிடியென்ற
ஆள் நீயன்றோ?
அடிக்கும் சாட்டில்
அழிக்க இன்னுமோர் ஐம்பதினாயிரம்



இளைத்ததமிழரை, இயலாது போனது
ஏமாற்றம் உனக்கு!
என்றாலும் உன் 'ரத்த'
மாமா விளங்காரா மருமகள் ஏக்கம்?
எப்படியோ இதற்குள் இரைகொண்டு
சப்பித் துப்பினீர் ஆயிரம் தமிழரை!
அம்மணி! நர்னூறு அப்பாவிப் பிணங்கள்
செம்மணி வயிற்றினுள்!
சித்திர வதைகொள்ற
மிகுதி அறுநூறைச் சகதி எதற்குள்
புதைத்தீர்?
எதுவும் கதைக்கா மோனமேன்?

அஞ்சேல் குருடர் அகிலம் இது உன்
செஞ்செட்டை யைஎவன் சிறகெனத் தொழுவது?
ஓராயிரம்போக ஒன்பதோ டிருபது
சேரா யிரத்தையும் சிதைக்கிறாய் விதமாய்;
தடுத்து மருந்தைச் சாவுபல் லாயிரம்;
தடுத்து நிவாரணம் சாவுநோய்த் தாயிரம்;
இப்படி எத்தனை செப்பிடு வித்தையால்
வென்றனை தமிழரைக் கொன்றிடுங் குறியில்!
சடலங்கள் கிளறல் தாமதப்படுத்தி
படலப் புகையால் பரந்தவான் மறைத்தாய்!
உனக்கு 'மறைப்போ' ஓர்சின்ன வேலை!
தனித்துனக் குரிய சந்ததிச் சொத்து!
கண்ணை மூடிக் கபடப் பூனை
உண்ணும் பாலில் ஓநஞ்சும் புகலாம்
உள்ளும் புறமும் உனக்கடி விழலாம்
வெள்ளை கூட வெளுறிச் சிவக்கலாம்.

"பத்தா, அப்பா, படுகொலை யாலே
செத்தார்" எனக்கண்ணீர் சிந்தியே அதிபதி
ஆனது போல்இனி ஆம்; உன் பிள்ளைகள்
போனதைச் சொல்லிநீ புதிய தேர்தலில்
வெல்ல நினைப்பதாய்ச் சொல்லுகிறார் சிலர்
எதுவோ...?

## பெயர்கூடச் சொல்வார்கள்!

மயன்/2

அநாதரவாக எனது சனங்கள்
உப்புவெளியில் புதையுண்டு கிடக்கிறார்கள்
முன்பு அது அவர்களது திறந்தவெளிச் சுடலைதான்
இப்போது முட்கம்பி அடைப்புக்குள்,
தனிமையாய் நிற்கிறார்.
சவங்களையும் கொலைகாரர்களையும் தவிர
மூன்று வருடத்தில் யாருமே அங்கு வரவில்லை;
பாடைகள் புகவில்லை
பறையோசை கேட்கவில்லை
பட்டாசுகள் கொழுத்தவில்லை
சிதைவைக்கப் பூவரசு அடுக்கவில்லை
யாரும் பாசுரங்கள் பாடவில்லை.
ஒருவரும் மண்குடம் ஏந்தவில்லை.



எவரும் கொள்ளி வைக்கவில்லை.
நல்ல நிசப்தம்
இடையிடையே பூட்ஸ்காலின் சத்தமும்,
பேய்க்காற்றின் இரைச்சல் கேட்டாலும்
தூங்குதற்கு இந்த அமைதி போதும்.
புதையுண்ட எனது சனங்களுக்கு
யாரும் காடாத்திக் கொட்டவில்லை
சிறுதடியால் மணல்நிலத்தை உழவில்லை.
நவதானியம் விதைக்கவில்லை.
ரொட்டியும் படைக்கவில்லை.
அவர்களது ஆவிமேலே போகாது,
அவச்சாவு
துயில்நேரம் போக
அது சுற்றிச் சுற்றி அங்கேயே நிற்கும்.
இப்போது அவர்களது துயில் எழுப்ப,
அந்த துன்மார்க்கன் வருகின்றான்
அவனை இந்த வரண்டநிலம் நன்கறியும்
அவனது குரல்வளை நெரிக்க
அங்குள்ள காற்றுக்கு பலமில்லை
அல்லது செய்திருக்கும்.
அந்த நெடுநீள உவர்நிலத்தில்
'இடங்களை' அச்சொட்டாய்ச் சொல்வானாம்
கொன்று குவித்தவரே
புதைகுழியைத் தோண்டுவராம்.
நல்ல வேடிக்கை.
'கிறிமினோலஜி'யில் டொக்டர்களாம்
சரியாக எலும்புகளைப் பொருத்துவராம்.
முழுமையான 'பயோடேற்றா' தருவாராம்.
குறிப்பாக, பெயர்களையும் சொல்வார்கள்.
நம்புங்கள், விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.
பேப்பரில் பெயர்கள் வரும்.
மற்றவர்களின் உறவுகள்,
சற்று பொறுக்கத்தான் வேண்டும்
வேறு இடங்களில் தோண்டும்வரை.
கடலில் மிதந்தவர்கட்கு தாங்கள் பொறுப்பல்ல
'அவர்கள்' சொன்னார்கள்.

## இங்கே உன் மகன் இல்லை

நா. யோகேந்திரநாதன்

அம்மா...
வாகனம் வரும் என்று வழிக்குமேல் விழி பதித்தாய்
வாகனங்கள் வந்தன- போயின
பட்டியல் நீண்டது.
அவர்கள் காணாமல் போனவர்களாம்
உன் மகன் வரவில்லை - இல்லை
எந்த மகனுமே வரவில்லை.

ஒழுகும் குருதியுடன் உத்தரத்தில் தொங்கும்
ஒருவனைக் கண்டால் உன்னிடம் எப்படிச் சொல்வது
அது உன் மகன் தானென்று.
கால் மேலும் தலைகீழுமாக மூச்சுக்குழல் வெட்டப்பட்டு



வைக்கப்பட்ட சட்டியில் வடியும் இரத்தம்
உன் மகனுடையது என்பதை
உன்னிடம் சொல்ல முடியுமா?

மின்சார அதிர்வில் உடல் பதறும் அந்த ஒருவனின்
உயிர்மூச்சின் கடைசி வினாடியை
எப்படி உன்னிடம் சொல்வது?

சாவின் எல்லைக்கு அனுப்பிவிட்டு
சாகவிடாது கசக்கும் அந்தக் கொடுமையை
எவரிடம் சொல்வது?

அழகுபடுத்தப்பட்ட அந்தக் கைநகங்கள்
குறடுகளின் இடுக்குகளுக்குள் குடிகொண்ட போது
'அம்மா' என்று அழைத்த அந்த அலறல்
உன்னைத்தான என்று எப்படிச் சொலலமுடியும்?

புதைகுழிகள் தோண்டப்படுமானால்
உடைந்து போன மண்டையோடும்
முறிந்து போன கைகால்களும்
உன் மகனுடையது என்று எப்படிச் சொல்வாய்?

நீ நிலாக் காட்டிச் சோறூட்டிய
அந்த விழிகளைத் தேடுவாய்.
இளமையின் பொலிவில் அரும்புவிட்ட
அந்தச் சிறு மீசையைக் காண விளைவாய்.
பூரித்துப் பொங்கி வளரும் அந்த இளம்
தோள்களைப் பார்க்கத் துடிப்பாய்.
எல்லாவற்றுக்கும் மேலாக
அம்மா என்று ஆசையுடன் அழைக்கும் அந்த
நாவைத் தேடுவாய்.

தாயே! - எதையுமே அங்கே உனக்கு என்னால்
காட்ட முடியாது.
எனவே, மன்னித்துக்கொள்
இங்கே உன் மகன் இல்லை - அவன்
வழமை போல் உன் நெஞ்சில் மட்டும்.

## நிறமிழக்கும் நகரத்தில்

கருணாகரன்

அது வனமொன்றின்
ரகசிய அடுக்குகளில் நிகழவில்லை
கனவுகளும் பாதச்சுவடுகளும் அழிந்த கிராமங்களில்



வெண்கொடிகள் நடப்பட்ட நகரின்
இருள் ஆழங்களில்
பேச்சொடுங்கி
பாடல்களும் ஒளியும் வற்றிய
இரவுகளில்
ஒதுக்குப்புற வெளியில்
உவர்ப்புதர்களின் கீழ் ரகசிய மடிப்புகளில்
அது நிகழ்ந்தது.

உணர்வழிந்த உயிருடனும்
உயிரணுவின் மூளைசிதைய
வதைபட்டுலைந்த பிணமாயும்
குழிகளில் புதைக்கப்பட்டனர் மனிதர்கள்
எங்கள் மனிதர்கள்
யாருங்காணாமற் பிடித்துச் செல்லப்பட்டோர்
யாருமறியா இருளின் ஆழத்துள் புதைக்கப்பட்டனர்.
ஆட்காட்டியோ தன்குரலடக்கி அதை அறிந்திருந்தது
அக்கணங்களில்
தவறியெழும்பியொலித்த அவலக்குரல்களை
யாருங்கேட்கா வண்ணமாய்
அவர்கள் சன்னங்களால் மேவினர்
ஆட்காட்டியோ துயரத்தோடதைக் கேட்டிருந்தது
யாருமறியாத படியாய் அந்நாடகம் நடக்கையில்
ஆட்காட்டியோ தன்சிறகொடுக்கி
அதையெல்லாம் பார்த்திருந்தது.

வயற்கரையில்
அதன் முதிய வளைவீடுகளில்
மூன்று குஞ்சுகளும்
குஞ்சாகும் இரண்டு முட்டைகளும்
அந்தப் புதைகுழிகளில் மூடுண்டன
நண்டின் வளைகள்மீதும் நாலுகுழிகள் ஐயோ
அக்கணமோ
குரலை விழுங்கி அக்குருவி தவித்தது
தன் விதியழியத் தானேபார்த்துத் துடித்தது

அவ்வெளியில் விரிந்த பயங்கரங்கண்டு
அது விறைத்தது.

II

அந்த இரவுகள் வெளிறத் தொடங்கியபோது
இரவின் ரகசியங்கள் உதிரத்தொடங்கின.

மழித்த முகத்துடன்
பகலில் மலர்த்திய புன்னகை
இரவில் வன்மமாய்ச் சிலிர்த்தது;
உறவின் தளிர்முனையென
அசைந்த வெண் கைகள்
சாமங்களில் உயிர்பிடுங்கும் கூர்நகங்களோடு நீண்டன.
'நலமா?' வென மென்குரலெழுப்பும்
அன்பில் தோய்ந்துழலும் நாக்குகள்
இருளில்
பச்சை ரத்தம் நக்கத் தவித்தலைந்தன

இரவுகளில், இருளின் ஆழங்களில்
இப்படி அற்புதங்கள் நிகழ்ந்தன
பிறகு
காலையில் மறுபடியும்
சீருடை, தொப்பி, சப்பாத்துடன்
துப்பாக்கி தூக்கிய குழந்தைகள்
வாய் மலர்த்தின; பூச்செண்டுடன் கையசைத்தன.

ஐயோ வெண்கொடிகள் நடப்பட்ட நகரத்தில்
அற்புதங்கள் நிகழ்கின்றன இப்படி...இப்படி...

III

கண்ணீர் நிரம்பிய முற்றங்களில்
துயர் முற்றிய பெண்களின் சித்திரம் நடுங்குகிறது.
வெம்மை தகிக்கும் தெருக்களில்
வேர்சுட்ட மரங்களின் மீதலைகின்றன
கரும்பட்சிகள்.
மலம் பரவிய முற்றமாயிற்று
நகரின் தோரண வாசல்.



## சிலுவையூன்றாச் சவக்காலை

எஸ். உமாஜிப்ரான்

கழுத்தை வளைத்த
சுருக்குக்கயிற்றைப் பழிதீர்க்க
துர்நாற்றம் மிகுந்த உண்மைகளை
*மண்தூர்த்தகைகள் கக்கின.

உண்மைகள்
காணாமல்போன மனிதர்களை பிணங்களாய் கிளர்த்தின.
மண்ணகழ்ந்த கிடங்குகளில் மனிதர்களை நிரவி
செம்மணிவயலில் சாவிளைத்த இராணுவச்சாகசம்
சந்திசிரித்தது.

உயிர்ப்பொறை உரியுண்டு உயிர்சுண்டிய
எப்புருஷர் தேகப்பொதிகள்
செம்மணியின் கள்ளறையுள்ளிருந்து புகைந்தன.

வனப்புமிகு எம் பெண்டிர்
தசைபுசித்த வெறியுடல்கள்
தசைகுளிரும் பொழுதுவரை புசித்த
தசைவெறி உடல்கள்
செம்மணியின் பசியமண்ணில் புதைனமிட்ட பிண்டங்கள்
தெருக்களில் சம்மணமிட்டு வார்த்தையாடின.

குழிகளில் புழுத்த
உடல்கிளைத்த வயிறுகளின்
ஒப்பாரிப்பாடல்பெற்ற ஸ்தலமாயிற்று செம்மணி.

சுடலை சூடிச் சுடர்ந்த செம்மணியின்
சிலுவையூன்றாச் சவக்காலைக் குரூரம்
மனங்களைத் தின்கிறது.

கம்பிச்சிறையொன்றுள்
உயிரைக் கிடுக்கிக் கிடக்கும் என்ற
குருதித்துயர் தேற்றலில்
அழுகிய குருதி நாறிற்று.

கண்ணிலொற்றிய தாலிகள் அறுந்தன.
சுமந்த சூலறைகள் கருவழிந்தவாறாய்க் கலங்கின.
உண்டியொழித்து
வயிறு சுண்ட நோற்ற நோன்புகள் பொய்த்தனவா?

பிணவீச்சம் கமழ வெட்டியான்கள் பவனிவருகிறார்கள்.
எந்த ஒப்பனைகளாலும் முடியவில்லை
சவக்களை பொருந்திய முகங்களைச் சிங்காரிக்க.
வயல்வெளிகளில் இடுகாட்டின் அமைதியுறைகிறது.
சொப்பனங்கள் வியர்க்க
நெற்குலைகள் பிணங்களாய் ஊசலிடுகின்றன.
நடுநிசியமான பல்லிடுக்கில் கந்தலாகக்கழிகிறது இருப்பு.

சிலுவையூன்றாச் சவக்காலைக்கிரையாகுமோ வாழ்வு?
வாழ்வைச் சப்புகிறது எண்ணம்.

* படையினன் லான்ஸ்கோப்ரல் டி. சோமரட்ண ராஜபக்ஷ



## காலம் பதிலுரைக்கும்

அம்புலி

நெஞ்சப் பாறைகளின் ஈரத்தில்
அக்குரல்கள் ஒலித்தவாறுள்ளன.
தீக்கங்குகளின் ஒளிரிடை
உக்கிப்போன முகங்கள்
எழுந்து புலம்புகின்றன.
விழிகள் அசையும் எப்பரப்பிலும்
அம்முகங்களின் வெம்பல்
விசுவரூபமெடுக்கின்றது.
உப்புக்காற்றின் ஈரத்தில்
கண்ணீர்த்துளிகள்
மோதிச் செல்ல

தணல்பூத்துக் கிடக்கும்
மயான வெளிப்பரப்பில்
ஓ! எங்கள் உறவுகள் ...
யாரும் தனித்திருக்க விரும்பாத
காற்று வெளிகளில்
எப்படிக் குடியிருக்கின்றீர்?

வெண்புறாவின் இறக்கை மறைப்பில்
சூரியன் இருண்டுகிடக்க
அதன் அலகுக் கூரும்
நகங்களின் கோரமும்
நரகத்தின் பயங்கரத்தைச்
சுமந்த அதன் முகமும்
சாவிலுங் கொடியதாய்...

ஏனிந்தத் தீர்ப்பளித்தார்?
சுமையிறக்கிய பின்பே
சுடுகாட்டில் இடுகின்ற மனிதரை
நிம்மதியற்றுக் கொன்று ஏன் புதைத்தார்?

குதறுண்ட எம்
குருத்துக்களே...
வல்லூறுக்கிரையாகி
வதைக்கப்பட்டிறந்த எம் வசந்தங்களே...
உம் ஓலக்குரலுக்கிரங்கா
அரக்கரை உலுக்கப்
பூகம்பம் உதிர்ப்போம்.
எம்தேச வெளியெங்கும்
சாக்குழிகள் தோண்டி – எம்
பூமிக்குரமாய்ப் புதைப்போம்
நாம் சிந்திய கண்ணீருக்கும்
செந்நீருக்கும் பதிலுரைக்க
சிங்களத்துச் சேனைகளை
இழுத்து வந்துள்ளது காலம்
வந்தவர் இனிச் சென்றிலர் .



## மையத்தழல்

அமரதாஸ்

தெருவொன்றிற் பயணித்தபோதோ
தூங்கும் போதோ
கனிந்து பொழியும் கனவுகளில்
முழுகும் போதோ
காணாமற் போனீர்கள்.

உறவுகளின் இழைகள் ஈய்ந்து
அறுபட்ட புண்களிடை
துயரொழுகத் துயரொழுக
சிறகுகள் கிழியுற்ற வலுவீனராய்
கொலைக்கருவி முனைகளாற் கொழுவுண்டு
கடத்தப்பட்டீர்கள்.

உங்களுடைய ஆண்குறிகள்
பிதுக்கிச் சிதைக்கப்பட்டிருக்கலாம்,
திறக்க மறுத்த பெண்குறிகள்
திரண்ட முனைகளின்
மூர்க்கத் துளாவல்களால்
பிளக்கப்பட்டிருக்கலாம்
வித வித வதைகளால் விகாரித்து
சிறையிருளில் நெரியுண்டு
மரித்திருக்கலாம் நீங்கள்.

பெரு வெட்டையொன்றின் ஆழமோ
மலக்குழிகளோ
பாழடைந்த கிணறுகளோ
இன்னும் என்னென்னவோ
உங்களை விழுங்கி
மௌனித்திருக்கலாம்.

உங்கள் வீடுகளின் வெற்றிடங்கள்
இனியாரால் நிரப்பப்பட முடியும்?

அந்நியக் கொடூரர்களின் பிடுங்குதலில்
உங்களை இழந்தோரின்
புண்களை ஆற்றும் தகைமை
யாருக்குண்டு?

துயர்களின் உராய்வுகள் பெருக
அவர்களிடை மூளும்
மையத்தழல்களைத் தணிக்கும் வலு
யாருக்கு வரக்கூடும்?



## கிளறல்

அருண்மொழிவர்மன்

மூச்சுத் திணறுது.
புழுங்குது—உவர்ப்பிசுபிசுப்பு
உடம்பெல்லாம் கசியுது—
குரல்வளை நசிஞ்சு
மூச்சுத் திணறுது—பக்கத்தில இருக்கிறவன்
விந்தூற்று சிதைந்து உயிரழிந்ததாம்.
அங்கிகள் அழிஞ்சு புழு நெழியுது.
மண் பாரம் இறுக்குது—சதையழிஞ்சு
எலும்பு நொண்டுது, உவர் கசியுது.
ஊதல் காற்று ஊளையிடுகுது.
விழிகள் கடைசியாய்ப் பார்த்த 'பச்சை' மட்டும்
நினைவுகளில் கிடந்து 'ஜீன்'களில் சேந்திட்டுது.
மேலே கிடக்கிற மண்ணை எடுங்கோ
கனக்கக் கதையள் சொல்ல வேணும்.

## நுளைவாயில் பிள்ளையார்

வளநாடன்

ஓவென்று காற்று ஊதும்
தெருவோரச் செடிகளில்
அது தடவிச் செல்லும்.
ஊ...என ஓசையெழுப்பும்.

ஒரு கையில் மோதகம் ஏந்தி
மறுகையில் அபயம் காட்டி
தொந்தி வயிற்றுடன் குந்தியிருக்கும்
நுளைவாயிற் பிள்ளையார்.
அந்தப் பெருவெளிதான்
செம்மணி.

செம்மணியில் எம்மவரை
அம்மணமாக்கிப் புதைத்தவர்கள்.
தன்னினத்தைப் புதைத்த
பரம்பரையின் அம்மணியே!
மனிதப் புதைகுழி
'அத்தனகல அலங்கார மூளி'க்கு வழக்கமல்லோ

'உமக்காய் நின்றவர்கள்' என்றுரைப்போர்
மூளிக்கு
வெண்குடை பிடிக்கிறார்;
சாமரம் வீசுகிறார்.

'உறவுகளின் குரல் எங்கு கேட்கும்?
காற்றோடு காற்றாய் நீண்டு
அசைந்து அடங்கியிருக்கும்.



புதைத்தவிடம் தெரியாமல்
ஆனையறுகும், சம்பும்
சதுரக்கள்ளியும், கத்தாழையும் படர்ந்திருக்கும்.
காவலுக்கு
கள்ளியும், கத்தாழையும்
வைப்பது தெரியாமல்
புதைத்தவிடம் தெரியுமென
வைத்திருப்பார்.

அதனால்தான்
அடையாளம் காட்டவென
ராஜபக்ஷ சொன்னான் போல்.
அம்மணிக்கு புதைகுழி
என்று சொன்ன பின்
கால நேரம் கேட்கிறார்.
திசைதிருப்புகிறார்.
'குடையும்' 'சாமரமும்'.

தொப்பென்று பீறியெழ வேண்டாமோ?
பொல்லாக் கோபம்.
கோப்பாய்ச் சந்தியிலும்.
யாழ் வளைவிலும்
முட்கம்பி வேலியாம்.
எட்டியெட்டிப் பார்க்கிறாராம்
தரவையை.

'காவல்' பார்த்தால்
தலை கவிழ்ந்து போகிறாராம்.
கோசம் எழுப்புகிறாராம்
கோபம் எழவில்லை.

செம்மணி மட்டுமா?
யாழ் தரவையெல்லாம்
புதை குழி தானிருக்கும்.
தோண்டப் புறப்பட
மாட்டீரோ?
முகப்பில்
நுழைவாயிற் பிள்ளைகளிருப்பர்.

## இன்னுமொரு 'ராஜபக்ஷ'

வேலணையூர் சுரேஷ்

இதை எழுதுவதனாற் கூட
என் கவிதை ..
குரூரமாகத் தண்டிக்கப்படலாம்.
அன்றேல் புதைக்கப்படலாம்
என் உறவுகளைப் போல்.
அம்பலப் படுத்துவதனால்
தாக்குதலுக்குட்படலாம்;
நானும்...
அந்த "ராஜபக்ஷ"வைப் போல.



சப்பித் துப்பிய சக்கைகளாக
அந்த
உப்புப் பெரு வெளியில்
உக்க வைக்கப்பட்டவர்களுக்காய்
அந்த ஒப்புதல் "வாக்குமூலம்"
பழிக்குப் பரிகாரமல்ல.
பலியெடுப்பிற்கான ஆதாரம் அதுவே.
தேடுவோம்; எல்லோரும் எல்லோருக்குமாய்.
நாம் தொலைத்து விட்ட
எங்கள் நிம்மதியையும் கூடத்தான்!
இனித் தேடுவோம்.
இறந்தவர்களை அல்ல.
இறக்கச் செய்யப்பட்டவர்களின்
இறுதி எச்சங்கள் இருந்தால்...?
ஆராய்ச்சிகாக இல்லாவிடினும்
எங்கள் ஆறுதலுக்கேனும்,
இன்னும் தேடுவோம்.
செம்மணியின் நிலக்கீழ் அறைகளில்
காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள
எலும்புக் கூடுகள்...
எவர் எவருடையதென்று?
இனியும் தேடுவோம்;
காணாமற் போனவர்களில்
எவரெவர்...
எங்குள்ளார்களென்று?
பின்னரும் தேடுவோம்.
எங்கெங்கெல்லாம்
புதைக்கப்பட்டுள்ளன
எம் உறவுகள் என்று?
இதை எழுதுவதனாற்கூட
என் கவிதை
தண்டிக்கப்படலாம்
அன்றேல் புதைக்கப்படலாம்.

# முள்வெளி

எஸ்போஸ்

சாக்குருவியின் துயரப்பாடலால் உறிஞ்சப்பட்ட
மிகப் பழைய மனிதனின் மரணம்
ஈரப்பாடை பற்றிய எல்லோரின் கனவுகளிலும்
ஈரித்துறைந்தது.
தீயின் வெம்மையடங்கி சாம்பல் பூத்த
அவனுடைய மரணம்
ஆன்ம வெளிகுதறும் அப்பாடலில் பின்னப்பட்ட போது



பூக்களினதும்
ஊதுபத்தி, மஞ்சள் நீரினதும் வாசனை
வெளியின் மடிப்புகளில் ஊர்ந்தது.
அந்த மிகப்பழைய மனிதனின் கனவுகள்
-மண்பற்றியதும்,விடிவுபற்றியதும்,ஆதிமொழிபற்றியதும்-
வரண்டழிந்த ஒரு காலத்தில்
சாக்குருவியின் துயரப்பாடலில் விழுந்த மரணத்திற்காக
அவனது குழந்தைகள் அழுதார்கள்;
இருதயத்தின் சோகத்தை உருக்கி
மனசெங்கும் பரவினர்.
மரணம் துயரப்பாடலில் அமிழ்ந்தமிழ்ந்து ஜனித்தது.
பூக்கள் வாசனையுமிழ்ந்தன;
ஊதுபத்தி, மஞ்சள்நீர், ஓமத்தீ.
ஒவ்வொரு மரணத்திலும் ஆழ்ந்த சோகத்தின் திரையில்
ஒரு தீக்கங்கின் ஒளி அல்லது சுவாலைகள்
தொடர்ந்து கொண்டே இருந்தன.
சாக்குருவி தின்றழித்த மரணத்திகதி
சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தது.
சாக்குருவி நிஷ்டையிலிருந்த ஒரு பொழுதில்;
அதன் துயரப்பாடலுக்காகவும்
பிண ஒளி சூழ்ந்த அதன் அடையாளத்திற்காகவும்
அவனுடைய குழந்தைகள்
சுருண்டொடுங்கிய ஒரு பொழுதில்
தொன்மை வேர் பெயர்த்து வெளிதாண்டிப் பெயர்ந்த
ஆதிக்குழந்தைகள் சிலவற்றை அவனுடைய நகரம்
இழந்தது.
யுகங்களை மிதித்துத்துரத்திய மரணத்தின் பாடல்கள்
ஆதிக்குழந்தைகளின் எஞ்சிய கனவுகளில்
வியாபித்தொளிர்ந்தன.
சாக்குருவியின் துயரப்பாடல் வெளியை விழுங்கிற்று.
கள்ளிச் செடிகளின் முளைகள் காற்றில் படர்ந்து
வெளியில் பரவி ,உறைந்தன;
மரணம் விழுங்கிய வெளியில் எலும்புகள் முளைத்தன.

## புதைந்த புறா

பு. சிந்துஜன்

புதைகுழிக்கும் உனக்கும்
நிறையவே உறவிருக்கிறது.
வாக்குறுதி தருவது, மறப்பது.
மீறுவது, கொன்று புதைப்பது...
ஏற்கனவே புதைக்கப்பட்டவற்றைக் கிளறுவது;
உனது முகத்தினியல்புகள் இவை.
அவை புரியாது
மயங்கியோர், புலம்பியோர், ஒத்துப்பாடியோர்
இன்றுணர்ந்தனர்;
சமாதானத்துக்காய் யுத்தஞ்செய்யுமுன்
''வெள்ளை'' முகத்தை.
அழகாகத் தோன்றுவிக்கப்பட்ட அதில்
மாறாத கோரமாய் எழுந்தது
செம்மணி
இதுவெம் தமிழ்க்குருத்துகளின் புதைகுழியல்ல
அம்மணி
உன் வெள்ளை வேடத்தினதும்தான்.



## உன்னோடு ஒரு நிமிடம்

தூயவன்

என்னரும் நண்ப;
ஒரு கணம் நில்,
உனது விழிகளைப் பார்க்கையில்
பின்னப் பின்ன
நடை போடும் உனது
கால்களைப் பார்க்கையில்
என்னைத் தெரிகிறது.
முன்னர் ஒரு போதில்

நானிருந்த நிலை தெரிகிறது.
நண்ப; எனது குரல்
உனக்குக் கேட்கிறதா?
நான்தான்,
உனக்கருகே இப்போதுள்ள புதைகுழியினுள்
இருந்து பேசுகிறேன்.
உற்றுக் கவனி,
இன்னும் பல குரல்கள்
உனக்குக் கேட்கும்
எல்லோருமே ஏதோ
ஒவ்வொரு இரவுகளில்
செத்தும் சாகப் போகின்ற நிலையிலும்
கொணர்ந்து புதைக்கப்பட்டவர்கள் தாம்.
ஒவ்வொரு புதைகுழியுமிங்கே
ஓராயிரம் கதை சொல்லும்
ஒன்றை மட்டும் நீ உணர்
அமைதி நகரென்ற போர்வையில்
நீ இங்குவர நிர்ப்பந்திக்கப்பட்டவன்
உண்மையென நம்பியும்
வந்திருக்கலாம்; தவறில்லை
எனினும் வந்த பின்னர்
மூடு திரைகளற்று
முழு உருவம் புரிந்த பின்னும்
இது என்ன விழியோரப் பயமும்
தடை முகாம் தோறும்
கால் பின்னும் நடையும்?...
அவனைக் கண்டு
உனக்கென்ன பயம்?...
பயந்து பயந்து திரிந்தால்
என்னருகில் ஒரு இடம்
உனக்கும் கிடைக்கலாம்
என்ன பயம்
யாரென இனங்காணப்படாமலே
பூமியினுள் புதைந்தென்ன லாபம்?
இன்னும் தயங்காதே
என்னைப் போல் புதையாதே!



## உயரும் என்குரல்

மலைமகள்

ஏன் இது இப்படி?
எவருக்கென்ன துரோகம் செய்தேன்
எனக்கிந்தத் துன்பம் நேர?
என் மனதறிந்து கனவில் கூட
எவரையும் புண்படுத்திய நினைவில்லையே.
ஏனிந்த அவலம் என்னைச் சூழ்ந்தது?
உயிர் வாழ்வதன்றி வேறொன்றறியாத
எம் உறவுகள் மண்ணோடு போக,
உளம் புண்ணாகி உடல் சோர்ந்து
வீதியிறங்கி
வியர்வைத் துவாரங்களால் இரத்தம் கசிய
கதறியழுது அலையும் வாழ்வு
ஏன் எனக்கு வந்தது?
என்னைப்போலவே
இன்னும் சிலரின் ஆன்மாவும்
இப்படிக் கதறக்கூடும்.
மனதை மிதிக்கும் அரக்கச் சூழலில்
நசியுண்டிருக்கக்கூடும்.
என்னைப்போலவே அவர் விம்மலும்
தொண்டைக் குழியில் சிக்கி
நெருக்குண்டு புதையுண்டு கிடக்கக்கூடும்.
உள்ளக் கொதிப்பால் சூடேறி
வெந்நீராய் வழியும் என் கண்ணீரை
புதையுண்டுபோன மனிதரும்

புதைக்கச் சொன்னவரும் அறியாமல்போகலாம்.
போகட்டும் பரவாயில்லை.
நான் உரத்துக் கத்துவேன்
புதைக்கச் சொன்னவர் எவரோ
அவரின் நிம்மதியழியும் வரைக்கும்
நான் கத்துவேன்
இனியும் எவரையும் எதையும்
புதைக்க நினைக்கவும் முடியாமல்
அவர் அமைதி குலைந்து ஆன்மா அலைந்து
உடல் நடுங்கி இதயம் சிதைந்து
வாய் பிதற்றும்வரையில்
நான் கத்துவேன்.
ஒரு சொல்,
ஒரே ஒரு சொல்
கதைப்பதற்கும் வழியின்றி புதைக்கப்பட்ட
அத்தனை மனிதருக்குமாய்
அடிவயிற்றிலிருந்து எழும் என் கதறல்
செம்மணி வெளி கடந்து
பிரபஞ்சமெங்கும் பரவும்
நட்சத்திரங்களை உலுக்கும்
புயலின் திசையை மாற்றும்.
எரிமலையின் குமுறலையும்
பூகம்ப அதிர்வையும்
புதைக்கச் சொன்னவர் வீட்டு
முற்றத்துக்கு வரவழைக்கும்.
கடைசிமூச்சை அவர் விடும் கணத்திலும்
காதுக்குள் இரையும்.
மண்ணுக்குள் புதைக்கப்பட்ட மனிதரை
எழுப்பும் வல்லமை எனக்கில்லை.
ஆனால் கொல்லச் சொன்னவரை
உயிருடன் உலவும் பிணங்களாக்க
என் குரலுக்கு இயலும்.
வாய் கிழிந்து நரம்பு பிளந்து
குருதி வழிகையிலும் என் குரல் அதிரும்.
ஆதிக்கக் கோட்டைகள் உதிரும்வரையில்
எனது குரல் உயரும்.



## போராடும் எதுவும் நின்று நிலைக்கும்

**தமிழவள்**

**செம்மணி......**
***'ரிவரெச'ப் பேயின் ஊழிக் கூத்தில்**
**உயிர்காக்க எங்கள் இனிய உறவுகள்**
**இடம்பெயர்ந்து நகர்கையிலே**
**இதயம் கசிந்துருக வழியனுப்பி**
**'காத்தேன்**
**என் மக்களைக் காத்தேன்'**

எனச் சிலிர்த்த நீள் வெளி
பத்திரமாய் தான் வழியனுப்பி வைத்தவர்கள்
தன் மடிக்கே
பிணங்களாய் வந்தபோது
என்ன நினைத்திருக்கும்?
கோபத்தில் குமுறி
ஆற்றாமையில் வெந்து
துயரத்தில் அழுதிருக்குமோ
பெற்றவர்களைப் போலவே.
பயிர் விதைத்த நிலமெங்கும்
உடல் புதைத்த சிங்களமே,
உப்புவெளிக் காற்றின்
ஊ வென்ற பேரொலியில்
நானூறு உயிரொலிகள்
கலந்து தாம்பட்டவதை சொல்லி
காவிநிறப் பூச்சின் சாயம் அழித்து
கோரச் சிவப்பை உலகுக்குணர்த்தும்.
புதைகுழிகளே ஆட்சியைத் தெரிகின்ற
புனித தேசமிது.
நரபலியும் இனவெறியும்
பௌத்தத்தின் போதனைகள்
என்றான தீவு இது.
நீதிக்கும் பேச்சுக்கும்
சமாதானக் காற்றுக்கும்
இடமில்லை என்றான பின்னாலும்
உயிர் இழக்கக் காத்திருக்கும்
உறவுகளே
போராடும் எதுவும் நின்று நிலைக்கும்.
மற்றவை எல்லாம் அழிந்தே போகும்.
நினைவில் கொள்க.

* யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற 1995 ல்
சிங்களராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை



## புதைத்தவரின் புதைகுழி

சுதாமதி

அலைந்து வருகின்ற
மனித ஓலங்கள்
இன்னும் முடிவுறாத
பயணங்களிற் துயரம் சூழ
வாசல்கள் இருண்டன.

நிலவு படர்கின்ற
வெளியெங்கும் நிணங்களாய்,
இறுதி மூச்சடங்கியோரின்
இடுகாடான செம்மணி
ஏன் உயிரோடிருந்தவரின்
புதைகுழியானது.
மூச்சடங்குமுன்னே
மூடப்பட்டமண்மேடுகளில்
யார் யார் குழந்தைகள்?
எவரின் உறவுகள்?
முகவரி இழந்துபோன
தமிழனின் பொதுக்குழியா?
இருள் பிரியாத
காலையின்
இறுதிப் பிரிவாய்
கைகளிற் பூட்டப்பட்ட
விலங்குடன்
கொண்டு செல்லப்பட்டவன்
அம்மாவின் குழந்தையும்
அக்காவின் கணவனும்
'காணாமற் போனவர்கள்'
இனிய கிராமத்துப்பறவைகளே
குரலெடுத்துக்
கூவமுடியாதவர்களின்
இறுதிக் குரலைக்
கேட்டாயா?
'தாய்மை' பேசிய
பெண்ணரசியின்
கொலைக்கரங்கள் மூடிய
புதைகுழிகள் எத்தனையோ?
உறவுகளின் நெடிய
மூச்சுகள் சுட்டெரிக்க
விழிவழிகின்ற கண்ணீர்த்துளிகள்
பெரும் ஊழித்தீயாய் மாற
மீண்டும் எழும்
புதைத்தவரின் புதைகுழி.



## செம்மணி சிவப்பானது

**தயாமதி**

என் வீட்டில் இருக்கும்
ஆசைக் கிளியே:
உன்னை நான் கூண்டில்
சிறைவைக்கவில்லை

கூண்டின் கதவுகள் எப்போதுமே
திறந்துதான் இருந்தது.
உன் தேவைகளை தீர்த்திட
எம் வான்பரப்பெங்கும் நீ பறப்பாய்.

அந்திவேளையில்
உன் இருப்பிடம் வந்தடைந்து
என்னோடு கொஞ்சு மொழிபேசிக்
களித்திருப்பாய்.
உன்னினப் பறவைகளோடு
உல்லாசமாய்த் திரிவதற்கு
தடையேதும் நான் போட்டதில்லை
கூண்டின் கதவுகளைப் பூட்டவில்லை.

இனவழிப்பு வேடர்களின்
அம்புபட்டுப் பாய்ந்த செங்குருதி
செம்மணித் தரையைச் சிவப்பாக்க
உன்னிலப்பறவைகள் துடிதுடித்து மாண்டதை
தப்பியோடிவந்தநீ சொன்னாய்.
நேற்று
உன்னோடு பறந்த உன்னினப்பறவைகள்
இன்னும் கூடு வரவில்லை.

உன்னினத்தை அழிக்கவே
அவர்கள் அம்புகளுடன் காத்திருக்கிறார்கள்.
என் ஆசைக்கிளியே:
நீ நீண்டகாலம் என்னோடு இருக்கவேண்டும்
உனக்கான சுதந்திரக்காலம் வரும்வரை
செம்மணியின் ஓலத்தை
உலகெலாம் எடுத்துச் சொல்ல
என்னோடிரு என்கிளியே!
இந்தக்கூட்டின் மடியில்
விடுதலைப்பாடல் ஒலிக்கும்வரை
நீ என்னோடு இரு.



# உயிரொளி உயர்ந்த வெளி

ப. தயாளன்

கர்ச்சிப்புக்களின் ஒலித் தெறிப்பு.
இயலவில்லை உம் மயிர் சிலிர்த்து நகங்களை நீட்ட!
கொடும்பனி சூழ்ந்ததெனவான தும் உடல்.
உடல் மீதில் கர்ச்சிப்புகள் மோதித் தெறித்தன.
பேய்க்குரல் எழுந்து காதிலறைய
வாய்க்குழியுள்ளே அடிவயிற்றில்
சமித்துதும் குரல்.
வியர்வை, கண்ணீரெனவாகவே
உப்புத்தரைகளால் உறிஞ்சப்பட்டன
உடல் பெற்ற உபாதைகள்.
இராட்சத விழிகளில் வக்கிரம் வழிந்து வழிந்து
கரைத்தது உங்களை,
செம்மணி மண்ணோடு குழைபட்டு(த்)
தசைகள் எருவானதிப்போ!
உருக்குலைந்த எலும்புகள்
அன்றேல் ஓரிரு மச்சைகள் மட்டும்
உங்கள் மரணத்தின் சாட்சியாய் அழியாதிருக்கலாம்.
சுதந்திர தேசத்தில் விலங்காபரணம் சூடியவர்களே!
சுதந்திர தேசத்தில் விலங்காபரணம்சூட்டப்பட்டவர்களே!
செ(ரி)த்துப் போன கதறல்கள்
நீங்கள் மரித்த பின் காற்றிலேறியது மெல்ல
நீண்ட அலைவின் பின்னெம் காதிலறைந்து,
அதிர்ந்ததெம் உடல்
உலகமும்.
விதைகள் நசுக்கப்பட்ட உமக்கில்லை உயிர்ப்பென்று
கர்ச்சிப்புக்களின் ஒலி நடுவே ஆங்காரமிருந்தது!
உயிரவாவுற்ற அவரொருவன் வாயொலியில்
கர்ச்சிப்பினூடான அகங்காரம் நொருங்கிற்று!
இனியும் நினைவுப் புயலெழுந்து
கர்ச்சிப்புக்களோடு மோதும் பலமாய்.
கர்ச்சிப்புக்களை மேவிப் பாயும்
சுடுகாட்டிற்கான பறையொலிகள் எழுந்து
பூபாளத்திற்கு மெட்டாகும்!

## உப்புவெளி மண்துகளே சொல்

**முல்லைக்கமல்**

செம்மணியே சிலை எழுப்பு
என்னவரை உன்மேற் சிலுவைதனில் அறைந்துற்ற
உப்புவெளி அரக்கு மாளிகையை உடன் காட்டு
நேற்றுவரை உயிர்சுமந்து உலாவித் திரிந்தவரின்
மூச்சை ஏன் கடித்துமிழ்ந்தாய்?
சுகந்தமென அவரிருந்த ஏகாந்தப் பெரும் பொழுதை
கரகரவெனக் காந்திப் பிடித்த பிசாசே!
என்னவரை செம்மணியைப் பிளந்தேன் சிறைவைத்தாய்
தலை பிளந்தவரைக் குழிக்குள் போடுகையில்
அவலஞ்சுழித்தெழுந்த அவர் மூச்சே!
உவர்த்தரையில் ஏன் குமுறிக்கரைந்தாய்?
ஐயோ எனக்கதறி எழுந்தாயே...
இரணியமே! ஏன் அவரின் உயிர் குடித்தாய்
உப்புவெளி மண்துகளே சொல்!
அவர் உதிரம் உறைந்திருக்க நியாயமில்லை
உன் கீழ் சிதையுண்ட அவர் உணர்வை
புத்தத்தைப் போர்த்திப் புதைத்தாரே
என்னவர்கள் இதயத்தை ஏன் கிழித்தாய்?
குமுறி எழும் இக்குரலுக்குப் பதிலென்ன?
வானப் பகற்பொழுதில் நட்சத்திரமாய்-இருளில்
செம்மணிக்குள் ஏன் இவர்கள் புதையுண்டார்?
செம்மணியை மறவோம்
இஸ்ரேலின் 'மசடா' போல்
இவர்கள் மூசிஎழவில்லைத்தான்
எனினும் செம்மணியை நாம் மறவோம்.



## உண்மைகளைத் தேடி

**பிரமிளா**

ஊருக்கு ஓதுக்குப்புறம்
கத்திக் குழறிக் குரல் எழுப்பினாலும்
எட்டி உதவிக்கு வரவும் ஆளில்லை
தட்டிக் கேட்கவும் யாருமில்லை என்று
நரபலி எடுக்கும் உன்
நயவஞ்சகச் செயலுக்கு
ஏற்ற இடமென்றா
செம்மணியைத் தேர்ந்தெடுத்தாய்?

பகையே ஒன்றைப் புரிந்துகொள்!
உண்மைகள் உறங்கியதாய்
யார் சொன்னார்?
நீதியும் தர்மமும் அழிந்ததாக
எவருரைத்தார்?
ஊமையாய் எங்கள் உறவுகளை
உக்கித்துப் போகச் செய்த கொடியவரே!
உலகைமூடியொரு திரையை நீர் விரிக்கலாம்
அழகிய வர்ணங்களால் சித்திரங்கள் வரையலாம்
ஆனால்—
சமாதானத்திற்கான(?) யுத்தத்தின் முடிவுகள்
அநாமதேயப் புதைகுழிகள்தானென்றால்
அதை யாரும் அனுமதிக்க முடியாது.
பொய்த்திரையைக் கிழித்துப்
புதைகுழியைத் தோண்டுவோம்.
எம் தேசத்தை மீட்க
நாம் எடுக்கும் முடிவின் நேரமிது
இதோ வருகிறோம்
தோண்டிய புதைகுழிகளில் உன்னைப் புதைத்திட
இதோ வருகிறோம்.

# செம்மணிகள் வேண்டாம்

சோழநிலா

ஈரம் கசிகின்ற வெண்மணற் பரப்பிற்கு
செம்மணி என்று பெயரிட்டவன்
நிச்சயம் ஒரு தீர்க்கதரிசிதான்.
புதைக்கப்பட்டவர்களுக்காக
ஒரு நினைவாலயம் எழுப்புமுன்
அவனுக்குமோர் அடையாளம் நிறுவுக.
ஓ துயரங்களின் சிகரச் செம்மணியே
தளிர்களாய் நாங்கள் தடம்பதித்த காலத்தில்
நாவற்குளிப்பாலம் தாண்டி
உன்னைக் கடக்கையில்
நீ இப்படி ஆவாய் என்று
நினைத்துக் கூடப் பார்த்ததில்லை



சூரியனுக்கஸ்தமனம் மேற்கில்
ஆனால் தனக்கஸ்தமனம் உனக்குள்ளென்று
அனுதினமும் உனைக்கடந்து பள்ளி சென்ற
* அவளுக்கும் தெரியவில்லை.
உலக மகாசோகத்தின் உறைவிடமே
உத்தரிப்பு ஸ்தலங்கள் பல கடந்து
உன்னுள் புதைந்துள்ள அந்த எலும்புகளுக்கு
மீண்டுமுயிர் வருமென்றால்… …
நெஞ்சு வெடிக்க
ரத்தக்கண்ணீர்க் கதைகூறும்
அவற்றின் வரலாற்றைக் கேட்பதற்கு
வலுஎவர்க்கும் இருக்காது.
இவர்களுக்கு
தோளில் சுமப்பதற்கு ஆட்களும்
தேக்குமரப் பெட்டியும் தேவைப்படவில்லை.
மூட்டையாய்க் கட்டி அரையடியாழத்துள் மூடுவதால்
ஆறாடிநிலமும் அவசியப்பட்டிருக்காது.
செம்மணி, உலகத்தின்
எட்டாவது அதிசயமாய்ச் செதுக்கப்படுகிறது.
இது அவலங்களின் அதிசயம்.
காணாமற்போன உங்கள் கண்மணிகளைக்
கண்ணீர் மணிகளுக்குள் காண நினைப்பவரே
ஊர்வலங்கள் வேண்டாம்
உண்ணா விரதங்களும் வேண்டாம்
கத்தி, கோடரி, வாள், மண்வெட்டி
பிடித்துப் பேரணியாய் வருக.
செம்மணியைக் கிளறிச் செத்தவராராரென்று
அடையாளம் காண்பதால் பயனென்ன?
ஆக்கிரமிப்பாளர் இம்மண்ணை விட்டு அகலும்வரை
இது ஏறுவரிசைதான்
தூக்குக கருவி
செம்மணிகள் இனிமேலும் எம்மண்ணில் எழவேண்டாம்.

* அவள்:- கிருஷாந்தி

# தகிக்கப்படாத எலும்புகள்

**மயிலை தர்மராஜா**

அந்தப் பெருவெளியில்
நிசப்தமாய்...
ஒரு கொடூரம் அரங்கேறியிருந்தது.
பால் வண்ணப் புறாத்தோலால்...
குருதி வடியும் கோரமுகத்தை
போர்த்தி நின்ற வல்லூறு
போர்வையை வீசி எறிந்தது.

அறுநூறாய்...
அதற்கும் மேலாய்—
ஆதிக்கச் சப்பாத்துக்களின்
அவலச்சுவை,
அரங்கேறியது.
வரவேற்று நின்ற வளையில்...
வண்ணத்துப்பூச்சிகள் வாடி வதங்கின.

திணறலாய் எழுந்த சுவாசிப்புக்களும்
தீய்ந்து போயின.
ஏராளமாய்...
துருத்திக் கொண்டு நின்றன,
அந்தச் செம்மணி எலும்புகளைப்போல
வினாக்குறிகள்.
நெருப்பை விசிறியடித்து,
நெஞ்சினிலே கட்டைகள் ஏந்தி
எலும்புகள் தகிக்கப்படவில்லை.

தமிழ்பேசிய குருதிக்காக
சிறைப்பட்ட உப்பு மண்ணில்
உயிர் ஒழுகிவடிய,
நொருங்கிப்போன எலும்புகளோடு,
செம்மணியில்
எங்கள் புதல்வர் புதைக்கப்பட்டனர்.



# 'செம்மணி' நினைவாக ஒருபாடல்

**புதுவை இரத்தினதுரை**

*குரல்*

ஊருமற்றுப் பேருமற்று உப்புத்தரைக்குள்ளுறங்கும்
உறவுகளுக் காகப் பாடுறோம் – கேட்க
யாருமற்றுப் புதைகுழிக்குள் போனவருக்காக இசைப்
பாடலொன்றை நாங்கள்பாடுறோம்.

*பல்லவி*

செம்மணி மீதெழுந் தோலமிடும் சின்னச்
சிட்டுக் குருவியே கூவிஅழு - அந்த
*''வெண்புறாப் பாடலை'' தந்தவர் வீட்டிலெம்
வேதனைப் பாடலைத் தூவி விடு.

*சரணம்*

சின்னச்சின்ன ஆசைகளைக் கண்ணிற் சுமந்தோடிவந்து
செம்மணியிற் புதைந்ததேனம்மா? – இந்த
வண்ணவண்ணக் கனவுகளை வாசலிலே புதைத்துவிட்டு
வாக்களிக்கச் சொன்னதாரம்மா?

நாய்கதறத் தாய்கதற நம்பிவந்த பேய்குதற
நள்ளிரவில் நடந்ததென்னம்மா? – அந்த
வாய்கள்திறந் தலறும்போது யாரருகில் இருந்ததென்று
சொல்லும்வாய்கள் இல்லைத்தானம்மா

காலப்பெருவெளியி லெங்கள் ஓலக்குரல் தமிழனென்ற
காரணத்தால் தொடர்வதேனம்மா – இது
ஆளவந்தோர் அமைதிப்புறா ஆனதென உலகம்நம்பும்
காலம்வரை நீளும் தானம்மா.

* ஸ்ரீலங்கா அரசின் ரூபவாஹினியில் ஒளிபரப்பாகும் சமாதானத்துக்கான ஒரு பாடல்.


கிருஷாந்தி கொலைவழக்கில் மரணதண்டனை பெற்ற படையினன் லான்ஸ்கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷவின் நீதிமன்ற வாக்கு மூலத்திலிருந்து:

''மேலதிகாரிகளினால் இரவில் அனுர்பப்படும் உடல்கள் செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முன்னூறுமுதல் நானூறு வரையான புதைகுழிகளை என்னால் காண்பிக்கமுடியும்''

*-வீரகேசரி 04.07.1998*

"In nights dead bodies send by our superiors were dumped in Chemmani I can show (point out) about three hundred to four hundred such graves."

**– Lance Corporal Somaratna Rajapakshe**



செம்மணித்தாயே!
நீ கண்ணீர்விட்டுக் கலங்கும்
இந்நேரம்
அருகில்லா உறவுகளானோம்.
''இல்லையே அவர்களிப்போ'' எனச்
சொல்லி அழுதிருப்பாய்.
உன்னில் உறவுகளைப் புதைத்த குழிமீது
புல்லும் முளைத்திருக்கும்.
உள்ளே வந்திருப்பின்
புதைந்திருக்க வேண்டியோர் பாடுகிறோம்.
ஆட்காட்டியின் அவலக்குரலையும் மீறிக்
கேட்கிறதா எம்பாடல்?